செய்தி வெளியீடு எண். 98 நாள். 14.02.2018

## மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பி.வேணுகோபால் ஆகியோர் மக்கள் தொடர்பு திட்டத்தில் 219 பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், மெய்யூர் கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் இன்று (14.02.2018) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு அரசு சுகாதாரத்துறை மற்றும் கல்வித்துறை சிறப்பாக செயல்பட்டு தனித்து விளங்குகிறது. இந்தியாவில் வேறு மாநிலத்திலும் இல்லாத சிறப்பான பல நல்ல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் மாண்புமிகு முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் 1036 வகை நோய்களுக்கு ரூ.4 இலட்சம் வரை மருத்துவ செலவுகள் அரசே ஏற்றுக்கொள்கிறது. பள்ளி சேல்லும் குழந்தைகளுக்கு விலையில்லாமல் 14 வகையான உபகரணங்கள், கல்வியறிவு மேம்பட மடிக்கணினி மற்றும் இடைநிற்றல் தடுக்க விலையில்லாத மிதிவண்டி ஆகியவற்றை வழங்கி வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில், அரசே பொதுமக்களை தேடிச் சென்று, கோரிக்கை மனுக்களை பெற்று உரிய தீர்வுகளை வழங்கி வருகிறது. மக்களின் குறைகளை பூர்த்தி செய்யும் வகையில் அரசே மக்களை தேடி அவர்களது கிராம ஊராட்சியில் மனுக்களை பெற்று தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. மக்களின் நலன் கருதி அனைத்துதுறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து மக்கள் தொடர்பு திட்டம் மாதந்தோறும் நடத்தப்படுகிறது. பொதுமக்கள் அரசு நலத்திட்டங்கள் பற்றி தெரிந்துகொள்ள வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, சமூக நலத்துறை, பொது சுகாதாரம் மற்றும் வருவாய்த்துறை ஆகிய துறைகளின் அலுவலர்கள் திட்ட விளக்கவுரை மூலம் தெரிந்துகொண்டு பயனடைய வேண்டும். மேலும், வாரந்தோறும் வெள்ளிக்கிழமையில் நடைபெறும் அம்மா திட்ட முகாமில் பொதுமக்கள் கலந்து கொண்டு மனுக்களை கொடுத்து பயன்பெற வேண்டும். பெண் குழந்தை திருமணம் என்பது முற்றிலுமாக தவிர்க்கப்பட வேண்டும். இது தொடர்பான புகார்களை 1098, 1077 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

பொதுமக்களிடமிருந்து பூவிருந்தவல்லி வட்டத்தில் வருவாய்த்துறை மூலமாக மனுக்கள் பெறப்பட்டு அதில் தகுதிவாய்ந்த மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அரசின் நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்படுகிறது. இன்று 41 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி உதவித்தொகைக்கான ஆணைகளையும், 35 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணைகளையும், 3 பயனாளிகளுக்கு புற்றுநோய் உதவித்தொகைக்கான ஆணைகளையும், 20 பயனாளிகளுக்கு விதவை உதவித்தொகைக்கான ஆணைகளையும், கிராம நத்தம் பட்டா நகல் 61 பயனாளிகளுக்கும், பட்டா மாற்றம் முழுபுலம் 1 பயனாளிக்கும், பட்டா மாற்றம் உட்பிரிவு 8 பயனாளிகளுக்கும், கிராம நத்தம் பட்டா 2 பயனாளிகளுக்கும், வாரிசு சான்று 11 பயனாளிகளுக்கும், ஒருங்கிணைந்த சான்று 3 பயனாளிகளுக்கும், 2 பயனாளிகளுக்கு கணவனால் கைவிடப்பட்டோர் சான்றுகளையும், 3 பயனாளிகளுக்கு விதவைச் சான்றுகளையும், ஆதிதிராவிடர் இனச்சான்று 3 பயனாளிகளுக்கும், சிறு, குறு விவசாயி சான்று 10 பயனாளிகளுக்கும், சமூக நலத்துறையின் கீழ் இரண்டு

பெண்குழந்தைகளுக்கான உதவித்தொகை 5 பயனாளிகளுக்கும், வேளாண்மைத்துறை சார்பாக 6 பயனாளிகளுக்கு மானிய விலையில் சோலார் விளக்கு பொறிகளும், 5 பயனாளிகளுக்கு மானிய விலையில் உயிர் உரங்களையும் ஆக மொத்தம் 219 பயனாளிகளுக்கு ரூ.27,390 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுமக்கள் அனைவரும் தங்கள் இல்லங்களில் தனிநபர் இல்லக் கழிவறைகளை அமைத்து பயன்படுத்த வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் இருந்து 50-க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, அதற்கு உரிய தீர்வுகளை விரைந்து வழங்குமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு.சீ.ஜானகிராமன், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.மா.நாராயணன், துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.பிரீத்தி, திருமதி.சவுந்தர்யா, பூவிருந்தவல்லி வட்டாட்சியர் திருமதி.ரமா, திருவள்ளூர் ஒன்றிய கூட்டுறவுத் தலைவர் திரு.சின்னசாமி, தனி வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், பல்வேறு துறை சார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**